பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நல்லூர் கிளை நூலகம்

Registered as a Newspaper பக்கங்கள்: 4 விலை ரூபா 5·00

# ஈழநாதம்

THE EELANAATHAM மக்கள் தினசரி PEOPLES DAILY

நாதம் 5 திருவள்ளுவர் ஆண்டு 2025 ஆனி 07 21- 06 - 94 செவ்வாய்க்கிழமை ஓசை 123

## ஜூலை 5 கரும்புலிகள் நாள் ஒழுங்குகளில் மக்கள் ஆர்வம்

இவ்வாண்டுக்கான கரும்புலிகள் நாளை அனுஷ்டிப்பதற்கு தமிழீழம் தயாராகி வருகின்றது. இந்நாளை அனுஷ்டிப்பதற்கான சகல ஏற்பாடுகளும் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளது. உலகையே உலுக்கும் வகையில் பல சாதனைகள் படைத்த கரும்புலிகளை நினைவு கூருவதற்காகவும் அவர்களுக்கு அஞ்சலி செலுத்துவதற்காகவும் எதிர்வரும் ஐந்தாம் திகதி கரும்புலிகள் நாள் அனுஷ்டிக்கப்படவுள்ளது. இக் கரும்புலிகள் நாளை உணர்வு (4ஆம் பக்கம் பார்க்க)

## சிறைச்சாலை உத்தியோகஸ்தர் குடும்பத்தினருடன் வெட்டிக் கொலை

### சடலங்கள் ஆற்றில் வீசப்பட்டன

தொலைக் காட்சி நிகழ்ச்சிகளைப் பார்த்துக் கொண்டிருந்த சிறைச்சாலை உத்தியோகஸ்தரும் அவரது குடும்பத்தைச் சேர்ந்த வேறு நால்வரும் இனம் தெரியாதோரால் வெட்டிக் கொல்லப்பட்டுள்ளதுடன் அவர்களது சடலம் அருகிலுள்ள ஆற்றிலேயும் வீசி எறியப்பட்டிருந்தது.

சென்ற 17-ம் திகதி இரவு ஒன்பது மணிக்கு கிரிந்த வெலவிலுள்ள அவரது வீட்டில் தொலைக் காட்சியைப் பார்த்துக் கொண்டிருந்த போதே இந்த ஐவரும் வெட்டிக் கொல்லப்பட்டனர். இச் சிறைச்சாலை உத்தியோகஸ்தர் நிவித்தகல சிறைச்சாலையில் கடமை புரிந்தவர்.

இவர்களின் சடலங்கள் ஆற்றில் மிதந்து வந்தமை கண்டுபிடிக்கப்பட்டதைத் தொடர்ந்தே இவர்கள் கொலை செய்யப்பட்டமை அறியவந்தது.

## ஐக்கிய முன்னணி அமைப்பதன் மூலம் இனப்பிரச்சினை தீர்க்க டி.பி. முயற்சி

### ஐ. நா. பொருளாதார ஒன்றிணைக்கப்பட்ட குழு அறிக்கை

(கொழும்பு)

சிறிலங்காவின் பிரதான இரு கட்சிகளும் ஒன்றிணைந்து ஐக்கிய முன்னணியொன்றினை அமைப்பதன் மூலம் தேசியப் பிரச்சினைக்குத் தீர்வுகாண டி.பி விஜேதுங்கா முற்பட்டுள்ளார் எனவும் இவ்வாறு இரு கட்சிகளும் ஒன்றிணைந்து மேற்கொள்ளும் திட்டத்தின் மூலமே பாதிக்கப்பட்டுள்ள தமிழ் மக்களுக்கு நல்ல தீர்வை ஏற்படுத்த முடியும் என ஐக்கிய நாடுகளின் பொருளாதார ஒன்றிணைக்கப்பட்ட குழுவின் விசேட புலனாய்வு அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் தேசிய பிரச்சினைக்கு தீர்வு ஒன்றை ஏற்படுத்தும் நோக்குடன் ஜனாதிபதி டி, பி.விஜேதுங்கா மேற்கொள்ளும் முயற்சி நிச்சயம் (4 ஆம் பக்கம் பார்க்க)

## பொலிஸ்-முஸ்லிம் மோதல் ராணுவம் வரவழைப்பு

(கொழும்பு)

வாழைச்சேனை பொலிஸ்-முஸ்லிம் மோதலையடுத்து அங்கு இராணுவம் வரவழைக்கப்பட்டுள்ளது. மேலும் கடந்த வெள்ளியன்று பொலிசார் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் ஒரு முஸ்லிம் பொதுமகனே பலியானதாக கூறப்படுகிறது. முன்னதாக ஐவர் பலியானதாக கூறப்பட்டது குறிப்பிடத்தக்கது. இச் சம்பவத்தில் 15 பேர் காயமடைந்துள்ளனர்

மசூதி ஒன்றினருகே துப்பாக்கிச்சூடு நடத்திய பொலிசாரில் 7 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் இப்பகுதியில் பணியாற்றிய 125 பொலிசார் இடமாற்றப்பட்டுள்ளனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

# அமெரிக்க இராஜதந்திரி யாழ். வர சிறிலங்கா அரசு அனுமதி மறுப்பு

## முந்திரிகைக்குளத்தில் அதிரடி இருவர் பலி; பலர் காயம்

முல்லை மாவட்டம் முந்திரிகைக்குள அணைக் கட்டிற்கு காவல்காக்க வந்த

...டன.

நேற்று முன்தினம் காலை 6.45 மணியளவில் முந்திரி

புலிகள் தாக்குதலை மேற் கொண்டனர். இத் தாக்குதலின் போதே இரண்டிற்கும்

## நிலைமைகளைக் கண்டறியத் தடை

(கொழும்பு)

அமெரிக்க தூதரகத்தைச் சேர்ந்த இராஜதந்திரியொருவர் யாழ்ப்பாணம் செல்வதற்கு விடுத்த கோரிக்கை சிறிலங்கா அரசால் நிராகரிக்கப்பட்டது. யாழ்ப்பாணத்தின் இன்றைய நிலையை அறிந்து கொள்ளும் பொருட்டே அமெரிக்க இராஜதந்திரி தனது விஜயத்தை மேற்கொள்ளத் திட்டமிட்டிருந்தார். ஆனால், நிலைமைகளை அவதானிக்க இராஜதந்திரி நேரில் செல்ல வேண்டியதில்லை என

முல்லை மாவட்டம் முந்திரிகைக்குள அணைக்கட்டிற்கு காவல்காக்க வந்த இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலில் இரண்டிற்கு மேற்பட்ட இராணுவத்தினர் கொல்லப்பட்டதுடன் பலர் காயமடைந்தனர். இவர்களது ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டன.

நேற்று முன்தினம் காலை 6.45 மணியளவில் முந்திரிகைக் குளம் இராணுவ முகாமிற்கும் மண்கிண்டி இராணுவ முகாமிற்கும்இடையில் முந்திரிகைக்குள அணைக்கட்டிற்கு காவல்காக்க பத்து இராணுவத்தினர் வந்துகொண்டிருந்தனர். இவர்கள மீதேவிடுதலைப் புலிகள் தாக்குதலை மேற்கொண்டனர். இத் தாக்குதலின் போதே இரண்டிற்கும் மேற்பட்ட இராணுவத்தினர் கொல்லப்பட்டதுடன் இவர்களது ஆயுதங்களையும் புலிகள் கைப்பற்றினர்.

இத்தாக்குதலில் ஒரு போராளி வீரச்சாவடைந்தார்.

## கைப்பற்றப்பட்ட ஆயுதங்கள்

முந்திரிகைக்குள அணைக்கட்டிற்கு காவல் காக்கவந்த இராணுவத்தினர்மீது விடுதலைப் புலிகள் தாக்குதலை மேற்கொண்டதுடன் அவர்களிடமிருந்த ஆயுதங்களையும் கைப்பற்றினர்.

புலிகளால் கைப்பற்றப்பட்ட ஆயுத விபரம் வருமாறு;

| | | |
|---|---|---|
| ★ | ரி-81 ரக எல். எம். ஜி. | — 01 |
| ★ | ரி-56-1 ரக துப்பாக்கி | — 03 |
| ★ | நடுத்தர ரவைகள் | — 468 |
| ★ | ஜே. ஆர். ரக கைக்குண்டு | — 03 |
| ★ | ரி-81 எல். எம். ஜி. மகசீன் | — 01 |
| ★ | ரி-56 மகசீன் | — 05 |
| ★ | கோல்சர் | — 01 |
| ★ | கிட்பாக் | — 02 |

## அராலியில் மோதல் இருபோராளிகள் வீரச்சாவு

அராலியில் கடந்த 18ஆம் திகதி சிறிலங்கா இராணுவத்திற்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் மோதல ஒன்று இடம்பெற்றது இம் மோதலில் இரண்டு போராளிகள் வீரச்சாவு அடைந்தனர்.

கப்டன் அங்ககீதன்/பாண்டியன் (சிவசம்பு சிவசுந்தரம் மட்டக்களப்பு) கப்டன் யோகரத்தினம்/யோன்சன் (இராசையாகநதப்பெருமாள்ஆனந்தப் புளியங்குளம் நொச்சிக்குளம் வவுனியா) ஆகிய இரு போராளிகளே வீரச்சாவு அடைந்தவர்களாவர் இவர்களுக்குவிடுதலைப்புலிகள தமது வீரவணக்கத்தை தெரிவித்துக் கொள்கின்றனர்.

இம் மோதலில்இராணுவத்தினர் தரப்பில் ஏற்பட்ட சேதவிபரம்தெரியவரவில்லை

இருவரதும் வித்துடல்களும் கிடைக்காததினால் இவர்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## வீரச்சாவு

முந்திரிகைக்குள அணைக்கட்டிற்கு காவல் காக்கவந்த இராணுவத்தினர் மீது நேற்று முன்தினம் காலை விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலின்போது போராளி ஒருவர் வீரச்சாவடைந்தார்.

வீரச் சாவடைந்த லெப்டினன்ட் விஜயபால் / நாயகன் (வடிவேல் நந்தீஸ்வரன் திருகோணமலை) என்னும் போராளிக்கு விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.



கப்டன் அங்ககீதன் / (பாண்டியன்)



கப்டன்யோகரத்தினம் (யோன்சன்)



லெப்டினன்ட் விஜயபால்/நாயகன்

தனது விஜயத்தை மேற்கொள்ளத் திட்டமிட்டிருந்தார். ஆனால், நிலைமைகளை அவதானிக்க இராஜதந்திரி நேரில் செல்ல வேண்டியதில்லை என சிறிலங்கா அரசு தெரிவித்துள்ளது.

அண்மையில் அமெரிக்க தூதுவராலயத்தைச் சேர்ந்த இராஜதந்திரி ஒருவர் யாழ்ப்பாணம் சென்றுவர விடுத்த கோரிக்கையை சிறிலங்கா அரசாங்கம் நிராகரித்துள்ளது. மேற்படி விஜயம் விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தைநடத்தவல்ல, யாழ் நிலைமைகளை நேரில் கண்டறியவே என அவ்வதிகாரி கூறியிருந்த போதும் அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

இதேசமயம் கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதுவரும் முன்னர்யாழ்ப்பாணம் செல்ல சிறிலங்கா அரசிடம் அனுமதி கோரியிருந்தார். இவரது கோரிக்கையும் நிராகரிக்கப் பட்டது. இக்கோரிக்கை நிராகரிக்கப்பட்டவேளை வெளியுறவு அமைச்சர் நாட்டில் இருக்கவில்லை. இதனால் அமெரிக்கத் தூதுவரின் இக் கோரிக்கை பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ஜோன் அமரதுங்காவிடமும் பாதுகாப்பு அமைச்சின் செயலர் ஜெனரல் ஹமில்டன் வனசிங்கவிடமுமே விடுக்கப்பட்டிருந்தது இங்கு குறிப்பிடத்தக்கது.

அமெரிக்கத் தூதுவரின் விஜயம் விடுதலைப் புலிகளுடன் பேச்சுக்கள் நடத்தவல்ல, யாழ். குடாநாட்டின் நிலைமையை அறிவதற்கே என

(4 ஆம் பக்கம் பார்க்க)

## வருடாந்தம் 1000 மாணவர் மருத்துவதுறைக்கு அனுமதி

(கொழும்பு)

பல்கலைக்கழகத்திற்கு தெரிவு செய்யப்படும் வைத்திய பீட மாணவரின் தொகையை அதிகரிக்க விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும் என அமைச்சர் திஸ்ஸ அத்தநாயக்கா தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் அமைச்சில் நடைபெற்ற உயர் மாநாடு ஒன்றிலேயே இதனை அவர் தெரிவித்துள்ளார் தொடர்ந்து தெரிவிக்கையில், வருடாந்தம் சுமார் ஆயிரம் பேரை மருத்துவ பீடத்திற்கு அனுமதிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுவருவதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## அலுவிகாரவை இழுக்க எதிரணிகள் முயன்றனவாம்

(கொழும்பு)

அமைச்சரவையிலிருந்து வெளியேறிய அலித் அலுவிகாரவை, சந்தர்ப்பத்தை பயன்படுத்தி எதிர்க்கட்சியினர் தம்பக்கம் இழுக்க முயன்றதாக கூறப்படுகிறது.

இதனாலேயேநிலைமையை உணர்ந்த ஐ. தே. க. அரசு அவருக்கு பொது நிர்வாக அமைச்சை நேற்று வழங்கியதாக தெரிவிக்கப்படுகிறது.

## இன்று படகுச்சேவை

கிளாலி - பூநகரி படகுச் சேவை இன்று வழமையான நேரத்திற்கு நடைபெறும் என அரசியல் துறையினர் அறிவித்துள்ளனர்.

## அலித் அலுவிகாரவுக்கு பொதுநிர்வாக அமைச்சு

அமைச்சரவையை விட்டு வெளியேறிய அலித் அலுவிகாரவிற்கு பொது நிர்வாக அமைச்சு வழங்கப்பட்டுள்ளது அலுவிகார நேற்று ஜனாதிபதி முன்னிலையில் தமது பதவிப் பிரமாணத்தை செய்து கொண்டார்.

முன்னர் துறைமுகங்கள் கப்பற்துறை அமைச்சராக இருந்த அலுவிகார அண்மைய அமைச்சரவை மாற்றத்தின் போது தமது அமைச்சுப்பதவி மாற்றப்பட்டதை ஆட்சேபித்தும் புதிய அமைச்சுப்பதவி எதையும் ஏற்க மறுத்தும் அமைச்சரவையை விட்டு வெளியேறியிருந்தார் இவர் வகித்த துறைமுகங்கள் கப்பற்துறை அமைச்சு தற்போது றொனி டி மெல்லிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

ஜனாதிபதி தனது பொறுப்பில் எடுத்துக்கொண்ட பொது நிர்வாக அமைச்சு தற்போது அலுவிகாரவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

## மட்டு. ஆசிரியர்களுக்கு புதிய அடையாள அட்டை

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள செங்கலடி பிரதேச கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளில்கடமையாற்றும் ஆசிரியர்களுக்கு விசேடமான புதிய அடையாள அட்டைகள் தற்போது வழங்கப்பட்டுவருகிறது. சிலகாலத்திற்கு முன்பு வழங்கப்பட்ட சிவப்பு நிற அடையாள அட்டைகளுக்குப் பதிலாக துகில் வெள்ளை நிறத்திலான புதிய அட்டைகள் இப்போது வழங்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

## வங்கி வெற்றிடங்களுக்கு 61 பேர் தெரிவாவர்

யாழ் மாவட்டத்தில் வங்கிகளிலுள்ள வெற்றிடங்களை நிரப்புவதற்காக நடந்த போட்டிப்பரீட்சையில் சித்தியெய்தியோரில் 61 பேருக்கு நியமனம் வழங்கப்படவுள்ளது.

மேற்படி போட்டிப் பரீட்சையில் சித்திபெற்றவர்களிலிருந்து தெரிவு செய்யப்பட்ட 61 பேருக்கான நேர்முகப்பரீட்சை வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு நடைபெறவுள்ளது நேர்முகப் பரீட்சைக்கான கடிதங்கள் அவசர தபால் மூலம் சம்பந்தப்பட்டவர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளதாகவும் 39 எழுது வினைஞர்களும் 14 தமிழ்ச்சுருக்கெழுத்தாளர்களும் 8 ஆங்கில சுருக்கெழுத்தாளர்களுக்குமே இந் நியமனங்கள் வழங்கப்படவுள்ளதாகவும் அரச அதிபர் தெரிவித்தார்.

இதேவேளை இப் பரீட்சையில் சித்தி பெற்றவர்களின் பெயர்ப்பட்டியலிலிருந்து முதன்மை அடிப்படையிலேயே முதலில் இந்த 61 பேரும் தெரிவு செய்யப்பட்டுள்ளதாகவும் மேலும் வெற்றிடங்கள் ஏற்படின் அப்பட்டியலில் அடுத்துள்ளவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள் எனவும் அரச அதிபர் மேலும் தெரிவித்தார்.

# வரி விளம்பரம்

## ஏழு தலைமுறைகள்

வெள்ளையர்கள் புரிந்த கொடுமைகளுக்கும் அக்கிரமங்களுக்கும் எதிராக கறுப்பின அடிமைகள் நடத்திய போராட்டத்தையும், கறுப்பின மக்களின் கலாசாரத்தையும் விபரிக்கும் நாவல் விற்பனையாகிறது -வசந்தம், தமிழ்த்தாய் புத்தகசாலைகளில். (8567)

## தேவை

05 வருடத்திற்கு குறையாத அனுபவம் உள்ள களஞ்சியப் பொறுப்பாளர் உடன் தேவை. உடனடியாக சகல சான்றிதழ்களுடனும் 21-06-94ஆம் திகதி காலை 8.00 மணி முதல் மாலை 4.00 மணி வரையுள்ள நேரத்தில் கீழ்க்காணும் விலாசத்தில் சமுகம் தரவும். தலைவர் யாழ். மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம், சலா சாலை வீதி, திருநெல்வேலி கிழக்கு, கோப்பாய். (சி-9845)

## வீடு விற்பனைக்கு

இல 48/1 கோணாவளை ஒழுங்கை கொக்குவில் கிழக்கு கொக்குவில் என்ற விலாசத்தில் வீடு ஒன்று விற்பனைக்கு உண்டு தொடர்பு ச. இராசசிங்கம். (8616)

## சலவைத்தூள்

மில்கவைற் சலவைத்தூள் சலவையைத் துரிதமாக்குகிறது. துணியில் அழுக்கைப் போக்கிப் பளிச்சிடும் வெண்மையைத்தருகிறது. சீருடைகளுக்குச் சிறந்த சலவைச் சாதனம். 50 கிறாம் பக்கற் ரு. 6/- 450 கிறாம் பெட்டி ரு. 50/- வெற்றுப் பக்கற்றுகளுக்கு அன்பளிப்புகள் வழங்குகிறோம்.

''மில்க்வைற்'' (சி/9843)

## SLEAS

அதிபர், SLEAS பரீட்சைகளுக்குரிய நுண்ணறிவு, கிரகித்தல், பொதுவிவேகப் பயிற்சிகள், ஆய்ந்தறிதல் திறன், கிரகித்தல் ஆகிய நூல்கள் வெளிவந்துள்ளன. -கலாநிதி க. குணராசா. எல்லாப் பிரபல புத்தகசாலைகளிலும் கிடைக்கும். (8617)


## விசேட பூஜை

(குருநகர்)

அளவெட்டி வடக்கு ஐயனார் கோவில் கும்பாபிசேக நினைவு தினவிழா அளவெட்டி தெற்கு, நாகேஸ்வரம் சிறீநாக வரதநாராயணம் தேவஸ்தானத்தில் இன்று செவ்வாய்க்கிழமை காலை 7- மணிக்கு விசேட பூசை, ஆராதனைகளுடன் நடைபெறும். (21)

## தாதியர் சங்க முயற்சி வெற்றி

(யாழ்ப்பாணம்)

பொது வைத்திய தாதிகர் சங்கத்தின் முயற்சிக்கு வெற்றி கிடைத்துள்ளது யாழ்ப்பாண போதனா வைத்தியசாலையின் பொது வைத்திய தாதிகள் சங்கம், மாணவத்தாதியர் பயிற்சியை முடித்த பின்னர் நியமனம் வழங்கப்படுவதற்கு இடைப்பட்ட காலத்தில் யாழ்ப்பாண வைத்திய சாலையில் கடமையாற்றிய மாணவத் தாதியருக்கு அக்காலப்பகுதியில் கடமையாற்றியமைக்கான ஊதியத்தைப் பெற்றுக் கொடுக்க எடுத்த முயற்சிக்கு வெற்றிகிடைத்துள்ளது. இதனால் சுமார் 120 க்கும் அதிகமான மாணவத்தாதியர் நன்மை அடைந்துள்ளனர்.

# ஆலய புனரமைப்பிற்கு நிதி ஒதுக்க அரசு மறுப்பு

-அமைச்சர் தேவராஜ்

(கொழும்பு)

வடக்கு - கிழக்கு பகுதியில் இராணுவ நடவடிக்கைகளால் இந்து ஆலயங்களுக்கு ரூ.23 கோடி வரை சேதம் ஏற்பட்டிருப்பதாக அமைச்சர் பி.பி தேவராஜ் கூறியுள்ளார்

இந்து சமய கலாசார அமைச்சின் ஏற்பாட்டில் இடம்பெற்ற பக்திப் பெருவிழா நிகழ்ச்சியில் கலந்து கொண்டு பேசிய அவர்மேலும் கூறுகையில் ஆலய அபிவிருத்தி மற்றும் புனரமைப்புக்கு போர் நடக்கும் சூழலில் நிதி ஒதுக்க அரசாங்கம் மறுத்து வருகின்றதுஎன்றும் தெரிவித்தார்.


## காணவில்லை




திருமதி பசுபதி சிதைப்பிள்ளை (சீதை)

(புகைபிரத வீதி, மல்லாகம்)

திருமதி பசுபதி சீதைப்பிள்ளை (சீதை) யைக் காணவில்லை. பொதுநிறம். மெல்லிய தோற்றம் வயது 70, உயரம் 5' 2" இருக்கும். இவர் இறுதியாக இளம் மஞ்சள் நிற நீல கரைபோட்ட வொயில் சாறி அணிந்திருந்தார். ஆறு கல்லு வெள்ளைத் தோடும் மூக்குத்தியும் அணிந்திருந்தார். மனநோயாளியான இவரை 17-6-94-ல் இருந்து காணவில்லை. இவரைக் கண்டவர்கள் இ.சிவலிங்கம், புகையிரத வீதி, மல்லாகம் அல்லது க. மகேஸ்வரன், 8, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம் என்ற விலாசத்துக்கு தொடர்பு கொள்ளவும்.

8, மணிக்கூட்டுவீதி,
யாழ்ப்பாணம். (8614)

தகவல்:
க. மகேஸ்வரன்



உஷார்!

போலிமருத்துவர்கள்

ஜூன் மாத

# நங்கூரம்

படியுங்கள்.

JURASSIC PARK

'நங்கூரம்' வாசகர்களுக்கான விசேட காட்சி 22-06-94 (புதன்) காலை 10.00 மணிக்கு யாழ். ஸ்ரீதர் திரையரங்கில் நங்கூரம் இதழுடன் இணைக்கப்பட்ட நுழைவுச் சீட்டுகள் இக்காட்சிக்கு மட்டுமே செல்லுபடியாகும்.

(சி 9841)

ராயஜெயம்

## 6ஆவது பிறந்ததினம்

21 - 06 - 1994




# நினைவு கூருகின்றோம் ...

## 21-06-1994

1986-ம் ஆண்டு இதே தினத்தில் வீரச்சாவெய்திய,

★ **மனோ-மதன்** (கிருஷ்ணசாமி முனுசாமி-உயிலங்குளம்-மன்னார்)

1987-ம் ஆண்டு யாழ்-உடுப்பிட்டி இலக்கணாவத்தையில் சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடிச்சமரின் போது வீரச்சாவெய்திய,

**சுதா** (தெய்வேந்திரம் செல்வானந்தராசா-மானாங்கானை-வல்வெட்டித்துறை)

1989-ம் ஆண்டு மட்டு-முறக்கொட்டாஞ்சேனையில் தேசவிரோதசக்திகள் பதுங்கிபிருந்து மேற்கொண்ட தாக்குதலின்போது வீரச்சாவெய்திய,

**நித்தி** (க. விநாயகமூர்த்தி-முறக்கொட்டாஞ்சேனை-மட்டு)

வவுனியா-மரக்காரம்பளைப் பகுதியில் இந்தியப் படையினருடனான சமரின்போது வீரச்சாவெய்திய,

**கப்டன் சுதா** (முத்துமாணிக்கர் சதானந்தன்- ண்டாரிக்குளம்-வவுனியா)

**பெனா-தயாபரன்** (கனகசிங்கம் நல்லைநாதன்-ஈச்சங்குளம் கல்மடு-வவுனியா)

வவுனியா-ஓமந்தை, சொந்தக்காரன்குளம் பகுதியில் இந்தியப்படையினர் மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய,

**கார்த்திக்** (சின்னத்துரை பரந்தாமன்-தாயகம்.கற்சிலைமடு-முல்லைத்தீவு)

**கப்டன் சிவா** (கறுப்பையா செல்வரத்தினம்-பாலம்பெருமாள் கட்டு,வட்டக்கண்டல்-மன்னார்)

**ராமகிருஷ்ணன்** (பால்சாமி ஞானசேகரம்-கரம்பைக்குளம், அடம்பன்-மன்னார்)

**பூட்டோ** (காத்தலிங்கம் சிறிதரன்-ஆலங்குளம்-துணுக்காய்)

**அரசன்** (வடிவேல் ரவிச்சந்திரன்-அறத்திநகர்-பளை)

1990-ம் ஆண்டு மன்னார் ஆலங்குளத்தில் எதிர்பாராதவிதமாக ஏற்பட்ட கண்ணிவெடி விபத்தில் எமைப்பிரிந்த,

**2-ம் லெப். இஸ்ரின்** (அல்போன்ஸ் லிபேரியஸ் சிராய்வா - 3ம் வட்டாரம், பேசாலை - மன்னார்)

மன்னார்-கொண்டைச்சி, மரமுந்திரிகைப்பண்ணை சிறிலங்கா இராணுவமுகாம் தகர்ப்பின் போது வீரச்சாவெய்திய,

**ரமணி** (- - மட்டு)

**குவேந்திரன்** (- - மணலாறு)

**மேஜர் வசந்த்** (போல்விக்ரர் விஜயதேவா - நறுவிலிக்குளம், வங்காலை-மன்னார்)

**கப்டன் தனபால்** (பொன்னுத்துரை-சிறிரங்கநாதன் பள்ளிக்குடா-பூநகரி)

**லெப்.சுப்பிரமணி** (கதிரவேல் சுப்பிரமணியம்-பரப்புக்கடந்தான்-மன்னார்)

**பிக்கன்ஸ்** (குலராஜசிங்கம் சர்வேசன்-உயிலங்குளம்-மன்னார்)

**சுபித்திரன்** (மாடாசாமி இராஜரத்தினம்-சின்னப்பாகடை, தலைமன்னார்-மன்னார்)

**சாந்தா** (கறுப்பையா கண்ணன்-புகையிரதநிலையத்தடி, தலைமன்னார்-மன்னார்)

**பஞ்சன்** (அந்தோனிப்பிள்ளை ராஜன் வேந்தக்கோன்-மாளிகைப்பிட்டி முருங்கன்-மன்னார்)

**லெப்.கோபிநாத்** (வடிவேல் ஜெயபா 3-121, 2வது பண்ணை-வவுனியா)

**பயஸ்** (கந்தசாமி கருணேந்திரன் - மயிலிட்டி - யாழ்)

**மேனன்** (கிருஸ்ணா சத்தியமூர்த்தி - பரப்புக்கடந்தான், வட்டக்கண்டல் - மன்னார்)


வலிகாமம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணியால் நடாத்தப்படும்

## ★ கண்காட்சி கலைவிழா ★

இடம்:- கொத்தணி நடுவப் பணியகம் மானிப்பாய்.

இடம்:- கொத்தணி நடுவப் பணியகம் மானிப்பாய்.

காலம்;-

21 - 06 - 94 செவ்வாய்

22 - 06 - 94 புதன்

★ காலை தொடக்கம் மாலை வரை ★

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

(சி-9837)

# கண்டனப் பேரணியில் அணி திரள்வீர்

சிறிலங்கா அரச படையினரின் குண்டுவீச்சைக் கண்டித்து இன்று காலை 10-30 மணிக்கு யாழ். மாவட்டக் கூட்டுறவுச் சபையில் ஆரம்பமாகும் கூட்டுறவாளரின் கண்டனப் பேரணியில் கூட்டுறவு நிறுவனங்களின் அனைத்து அங்கத்தவர்கள், பணிப்பாளர்கள், பணியாளர்கள், மகளிர்குழுக்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

பணிப்பாளர்சபை

வடமாகாண தெ. ப. பொ. கூ. ச. சமாசம்

(சி-9844)



★ ★

## செல்வன் பிரதீப்

சாவகச்சேரி சிவன் கோவில் வீதியைச் சேர்ந்த இராமதாசன் சாந்தகுமாரி தம்பதிகளின் அருமைப் புதல்வன் பிரதீப் தனது 6 ஆவது பிறந்ததினத்தை அக்கா பிரம்னி யுடனும் தங்கை பிரதீபா வுடனும் தனது இல்லத்தில் வெகு கோலாகலமாகக் கொண்டாடுகின்றார்.

இவரை அப்பா, அம்மா, சின்னஅப்பம்மா, வரணி பூட்டம்மா, நீர்வேலி பூட்டம்மா, சிங்கரா (பெரியப்பா), சாந்தினி (பெரியம்மா), ரிவானி அக்கா, ஆனைப்பந்தி கஜன் மாமா, லண்டன் தஜன் மாமா, லண்டன் தீபன் மாமா, அப்பம்மாமார், அம்மம்மாமார், பூட்டம்மா மார், தயா அத்தை, சாயுச்சியபதி (தேவி) அத்தை (இத்தாலி,) குகதாஸ் சித்தப்பா ரேணுகா குடும்பம் (இத்தாலி,) தங்கை பிரியங்கா, இரகுதாஸ் சித்தப்பா கோமதி குடும்பம்(இத்தாலி), இராகவதாஸ் சித்தப்பா கனடா, குருபரன் தாஸ் சித்தப்பா ஜீவராணி குடும்பம் சஞ்சிகா (இத்தாலி), லோகநாதன் தயாபதி அத்தை (ஜேர்மனி), இராகுலன் அமராபதி அத்தை (சுவிஸ்), நுணாவில் மேற்கு பொன்னுத்துரை குடும்பம், இலங்கேஸ்வரன் குடும்பம் (ஜேர்மனி), மட்டுவில் தெற்கு மகாதேவா குடும்பம், சுதர்விழி சித்தி, அருள்விழி சித்தி விஷயா தர்மினி சித்தி, சுதர்ஜினி சித்தி, மலர்விழி சித்தி, பத்மாவதி சிவராசா குடும்பம், சறோஜாதேவி ஜெயக்குமார் குடும்பம், ஈஸ்வரன்மாமா, ராகவன் மாமா, தூயவன் மாமா, மகிழ்மணி சித்தி, சுபாங்கி, நிலாஜி, சிருபா, நதியா, நிஷாந்தன், அஜிந்தன், வசாவிளான் திருநாவுக்கரசு குடும்பம், நடுவில் மாமா ஆகியோர் செல்வன் பிரதீப் பலகலையும் கற்று பல்லாண்டு காலம் வாழ்க வென உளங்கனிந்து வாழ்த்துகின்றார்கள்.

-- குடும்பத்தினர்.

(5096)

மேனன் (கிருஸ்ணா சத்தியமூர்த்தி - பரப்புக்கடந்தான், வட்டக்கண்டல் - மன்னார்)

அம்பாறையில் சிறிலங்கா இராணுவத்தினரால் படுகொலை செய்யப்பட்ட மட்டு - பெரியநீலாவணை 1ஐச் சேர்ந்த தமிழ்ப் பொதுமகன் மற்றும் மட்டுநகரில் வேலைக்குச் சென்று காணாமல் போன குமரபுரம் - புன்னைச்சோலையைச் சேர்ந்த தமிழ்ப்பொது மகன்.

திருமலை - கந்தளாய் பகுதியில் சிறிலங்காப் படையினரால் சுட்டுக்கொல்லப்பட்ட 13 தமிழர்கள் மற்றும் கல்லோயா புகையிரத நிலையத்திலிருந்த சிங்களக் காடையர்களினால் சுட்டுக்கொல்லப்பட்ட மட்டு - புகையிரத நிலைய விடுதி வாசிகளான 03 தமிழர்கள்.

வவுனியா - பண்டாரிக்குளம் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக்கொல்லப்பட்ட 02 தமிழர்கள்.

தமிழீழக் கடற்பரப்பில் படகில் பயணம் செய்து கொண்டிருந்த போது சிறிலங்கா கடற்படையினரால் மூழ்கடிக்கப்பட்டுக் கொல்லப்பட்ட 07 தமிழர்கள்.

1991ஆம் ஆண்டு கடலில் சிறிலங்காக் கடற்படையினர் மேற்கொண்ட பீரங்கித்தாக்குதலில் வீரச்சாவெய்திய,

**அமல்** (வில்லியராஜா றொபேட் - சொலமன் வீதி, கொய்யாத்தோட்டம் - யாழ்)

மட்டுநகரில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட நடவடிக்கைகளில் கொல்லப்பட்ட சித்தாண்டியைச் சேர்ந்த தமிழ் விவசாயி.

1992ஆம் ஆண்டு மட்டு - உன்னிச்சை, நாலரைக் கட்டைப் பகுதியில் சிறிலங்கா இராணுவம் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய,

**2-ம் லெப். மிருணன்-சதீஸ்** (நாகலிங்கம் தவச்செல்வன் - கொக்கட்டிச்சோலை - மட்டு)

**துசிதன்** (செல்வநாயகம் ரகுநாதன்- 9-ம்வட்டாரம், கொக்கட்டிச்சோலை - மட்டு)

கட்டுவன் காவலரணில் எதிர்பாராதவிதமாக வெடிவிபத்தில் வீரச்சாவெய்திய,

**லெப். சோழன்** (செபஸ்ரின் விஜயராஜ் - புனித ஜேம்ஸ் வீதி, குருநகர் - யாழ்)

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

★ இக்குறியிடப்பட்ட மாவீரர் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவராவார்.

தமிழீழ விடுதலைப்புலிகள்

(சி-9842)

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நல்லூர் கிளை நூலகம்

## சிந்தனைக்கு

தான் இன்றியமையாதவனல்ல என்பதை மனிதன் உணராதவரை, அவன் அறிவு உடையவனாக இருக்க முடியாது.

- ரிச்சார்ட் பேர்ட்

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம். 21-06-1994
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2024
தபால் பெட்டி எண். 05

## பரஸ்பர நன்மையால் கூட்டுக்கள் உதயம்

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவரும் சிரேஷ்ட அமைச்சர்களில் ஒருவரான தொண்டமானும், முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான அஷ்ரப்பும் கூட்டாக முன்வைத்துள்ள இனப்பிரச்சினைக்கான தீர்வுத் திட்டமே இவ்விவகாரத்தில் இறுதி வெளியீடாகும். தொண்டமானும், அஷ்ரப்பும் பலமாத முயற்சியின் பின்னர் இத்தீர்வுத் திட்டத்தைத் தயாரித்து ஜனாதிபதி டி. பி. விஜேதுங்காவிடம் சமர்ப்பித்துள்ளதாகத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

டி. பி. விஜேதுங்கா ஜனாதிபதியாகப் பதவி ஏற்ற பின்னர், பலர் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான முயற்சிகளை மேற்கொண்டபோதும் அதற்கு அவரின் ஒத்துழைப்பு கிடைக்கவில்லை. இனப்பிரச்சினைக்கான தீர்வுத் திட்டம், பேச்சுவார்த்தைகளுக்கான முயற்சிகள் இவை யாவற்றையும் அவர் எழுந்தமானத்திலேயே நிராகரித்தும் வந்தார். இவ்வாறு நிராகரிக்கப்பட்டவற்றில் உள்நாட்டு, வெளிநாட்டு முயற்சிகளில் பல அடங்கும் என்பது சகலரும் அறிந்ததே.

ஆனால், தற்பொழுது அமைச்சர் தொண்டமானும் - அஷ்ரப்பும் கூட்டாக முன்வைத்த யோசனைகள் குறித்து வாய்க்காணக்காகியும் டி. பி. விஜேதுங்கா மௌனம் சாதித்து வருகின்றார். இது இனப்பிரச்சினை விவகாரத்தில் டி. பி. விஜேதுங்காவின் தற்போதைய நிலைப்பாட்டில் மாற்றம் ஏற்பட்டுள்ளதா என்றே எண்ணவைக்கின்றது. சிலவேளை இவ்வெண்ணம் ஓரளவு சரியாகவும் இருக்கலாம்.

ஆனால், டி. பி. விஜேதுங்காவின் இம்மாற்றமானது அவரது உளப்பூர்வமான மாற்றமாகக் கொள்ள முடியாது. எதிர்வரும் தேர்தல் காரணமாக ஏற்பட்டுள்ள இடைக்கால மாற்றம் என்றே கொள்ளவேண்டும். ஏனெனில் டி. பி. விஜேதுங்கா தனது அரசியற் கொள்கை மாற்றம் குறித்து வெளிப்படையாக இன்னமும் அறிவிக்கவில்லை. அவ்வாறு அறிவிப்பினும் கூட அவரது கடந்தகால நடவடிக்கைகளைப் பார்க்கும்போது அது ஒரு ஏமாற்றுத்தனமானதாகவே இருக்கும்.

இதேசமயம் அமைச்சர் தொண்டமான் டி. பி. விஜே

## இரத்தினக்கல் கடத்தியவர் கட்டுநாயக்காவில் கைது

(கொழும்பு)

பல்லாயிரக் கணக்கான ரூபாய் பெறுமதியுடைய இரத்தினக் கற்களை வயிற்றினுள் வைத்து கடத்தி வர முயன்ற இலங்கையர் ஒருவர் கட்டுநாயக்கா விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டு உள்ளார். திருவனந்தபுரம்விமான நிலையத்திலிருந்து புறப்பட்டு வந்த ஏயார் லங்கா விமானத்தில் வந்த இப் பயணியிடம் பெறுமதி வாய்ந்த இரத்தினக் கற்களை வாயினுள் போட்டு விழுங்கி வயிற்றில் தேக்கி வைத்துக் கொண்டமை கண்டுபிடிக்கப் பட்டது. இதனைத் தொடர்ந்து இவர் நீர்கொழும்பு பகுதியிலுள்ளவைத்தியசாலையில் பலத்த பொலிஸ் பாதுகாப்புடன் சேர்க்கப்பட்டுள்ளார். பல சிறிய இரத்தினக் கற்களுடன் 18 பெரிய கற்களும் இவரது வயிற்றினுள் காணப்படுகிறதாம்.

இ. தொ. காவின் மீதான

## இடைக்கால தடையுத்தரவு நீதிமன்றத்தால் நீக்கம்

(கொழும்பு)

இலங்கைத் தொழிலாளர் காங்கிரசின் தேசிய சபையையும் நிர்வாக சபையையும் கூட்டுவதற்கு எதிராக கொழும்பு மாவட்ட நீதிமன்றம் கடந்த ஜனவரியில் பிறப்பித்திருந்த இடைக்காலத் தடையுத்தரவு விலக்கிக் கொள்ளப்பட்டுள்ளது.

மேற்படி இரு சபைகளையும் கூட்டுவதற்கு தடைவிதிக்கும்படி இ. தொ. காவின் பொதுச்செயலாளர் எம்.எஸ் செல்லச்சாமிசார்பாகநீதிமன்றில் மனு தாக்கல் செய்யப்பட்டிருந்தது தெரிந்ததே.

நீதிமன்றத்தின் இத்தீர்ப்பின் மூலம் அமைச்சரும் இ. தொ. கா தலைவருமான தொண்டமான் இனி மேற்படி இரு சபைகளையும் கூட்டுவதற்கு வசதி ஏற்பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது.

## தேடுவாரற்று கிடந்த 48 தங்கப்பாளங்கள்

(கொழும்பு)

மத்திய கிழக்கிலிருந்து கட்டுநாயக்காவிற்கு ஏயர்லங்கா விமானத்தில் சுமார் 50 லட்சம் ரூபா பெறுமதியான 48 தங்கப் பாளங்கள் தேடுவாரின்றிக் கிடக்கக் கண்டுபிடிக்கப்பட்டது. இத் தங்கப்பாளங்களுக்கு எவரும் உரிமை கோராததால் அவற்றைக் கண்டெடுத்த சுங்க அதிகாரிகள் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

பாதாள உலகினருக்கு

## சிறைச்சாலை ஊழியர்களே தகவல் வழங்கியுள்ளனர்

(கொழும்பு)

பாதாள உலகைச் சேர்ந்தவர்களின் நடவடிக்கைகளுக்கு உதவும்முகமான தகவல்களை வழங்குவதில் சிறைச்சாலை ஊழியர்கள் சிலர் ஏஜெண்டுகளாக செயற்பட்டிருப்பதாக பொலிசாருக்கு தெரியவந்துள்ளது. குறிப்பாக நீர்கொழும்பு நீதிமன்ற வளவில் வைத்து சிந்தக அமரசிங்க என்பவர் மீது மேற்கொள்ளப்பட்ட கொலை முயற்சி சம்பவத்தில் ஈடுபட்ட சொத்தி உபாலி குழுவினருக்கு தேவைப்பட்ட தகவல்களை சிறைச்சாலை ஊழியர் ஒருவரே வழங்கியுள்ளார். சிந்தக அமரசிங்க நீதிமன்றத்திற்கு கொண்டு வரப்படும் நேரம் முதல் அன்றைய தினத்தில் அவரது முழு நடவடிக்கைகள் தொடர்பாக சொத்தி உபாலி குழுவினருக்கு சிறைச்சாலை ஊழியர் ஒருவர் முன் கூட்டியே தகவல் வழங்கியுள்ளார்.

## யு.என்.எச்.சி.ஆர். பிரதிநிதி மட்டக்களப்பு விஜயம்

(மட்டக்களப்பு) ... பெற்ற மீராவோடை, மாங்

## அரசின் தலையீட்டினால் நோராட் பணிகள் பாதிப்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் நோராட் நிறுவனம் அதன் நிதியின் மூலம் மேற்கொண்ட அபிவிருத்தித் திட்டங்கள் அரசாங்கத்தின் தலையீட்டினால் பெரும் பாதிப்புக்கு உள்ளாகியுள்ளது.

நோராட் நிறுவனம் மட்டக்களப்பு மாவட்ட ஒன்றிணைக்கப்பட்ட புனர்வாழ்வு, புனரமைப்பு திட்டத்தின் கீழ் ஒவ்வொரு பிரதேச செயலகத்திற்கும் நிதி ஒதுக்கியது.

இந்த நிதியைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்பட விருந்த திட்டங்கள் தயாரிக்கப்பட்டு பரிசீலனை செய்யப்பட்டு திட்டப் பணிப்பாளரின் அனுமதியும் பெறப்பட்டு பிரதேச செயலகங்களுடன் ஒப்பந்தமும் செய்யப்பட்டது.

எனினும் வேலைகள் ஆரம்பிக்கப்பட இருந்த தருணத்தில் திடீரென வீதிகள் சம்பந்தப்பட்ட வேலைகளை செய்ய வேண்டாமென அரசாங்கம் அறிவுறுத்தியுள்ளது. இதனால் இந் நிறுவனம் மேற்கொள்ள விருந்த பணிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன.

இத் திட்டங்களில் மீள் குடியேற்றப்பகுதிகளில் சேதமடைந்த வீடுகள் திருத்துதல், வீதிகள், பாடசாலைகள், மலசலகூடம், கிணறு அமைத்தல் என்பன உட்பட பல அடங்கியிருந்தது குறிப்பிடத்தக்கது.

### புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

**1994 - 06 - 21**
**செவ்வாய் இரவு**

08.01 - கொண்டச்சி இராணுவமுகாம் தாக்குதல் நினைவாக சிறப்பு நிகழ்ச்சி.
'' தமிழ் மண்மீட்பு ''
08.10 - அறிந்து கொள்ளுங்கள் - தகவற்களஞ்சியம்
08.20 - நலந்தானா- கண்ணோயால் ஏற்படும் ஆபத்துக்களும் ஆலோசனைகளும்.
08.30 - செய்திகள்.
08.40 - கருத்துக்களம் - '' வில்லங்கம் ''
08.50 - களமும் கானமும்-''பாரமான சுகங்கள்'

**1994 - 06 - 22**
**புதன் காலை**

07.02 - மாவீரவணக்கம்
07.15 - நீங்கள் கேட்டவை
07.30 - செய்திகள்
07-35 - பத்திரிகைச் செய்திகள்

சத்திர சிகிச்சைக்கு உட்பட்ட பின்

## தாயாருடன் ஒரு தடவையே சந்திரிகா பேசியுள்ளார்

### அநுரா தெரிவிப்பு

(கொழும்பு)

சத்திரசிகிச்சைக்கு உட்பட்ட பின்னர் உடல்நிலை படிப்படியாகவும், உறுதியாகவும் தேறிவரும் சுதந்திரக் கட்சித் தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா பல தடவைகள் தொலைபேசி மூலம் தொடர்பு கொள்ள முற்பட்ட போதும்ஒருதடவை மட்டுமே திருமதி சந்திரிகா பதிலளித்தார். இவ்வாறு உயர்கல்வி அமைச்சரும் திருமதி சிறிமாவோவின் மகனுமான அநுரா பண்டாரநாயக்கா தெரிவித்தார்.

சிங்கப்பூரில் தாயாரைச் சென்று பார்வையிட்ட பின்னர் நாடு திரும்பியுள்ள அநுரா மேலும் கூறுகையில், தாயாருடனானசந்திப்பு தமக்கு மகிழ்ச்சிதந்ததாகவும், தனதுபிரசன்னம் தாயாருக்கு தெம்பூட்டியிருப்பதுடன் மகிழ்ச்சியளித்ததாகவும் குறிப்பிட்டார்.

தம்மை சிங்கப்பூருக்கு வரவேண்டாமென திருமதி சந்திரிகா கூறியிருப்பது பற்றி அநுராவிடம் செய்தியாளர் கேட்டபோது அவர் தொலைபேசியில் கூட ஒரு தடவை மட்டுமே தொடர்பு கொண்டு பேசியதாக தெரிவித்தார்.

## ஊழல் அதிகாரிக்கு எதிராக நடவடிக்கை எடுக்கவும்

### ஐ. தே. க. பா. உ.கள் கோரிக்கை

(கொழும்பு)

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலுக்கு முன்பாக ஊழல் மற்றும்அதிகாரதுஷ்பிரயோக நடவடிக்கைகளுடன் தொடர்புடைய அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று ஐ. தே. க பாராளுமன்ற உறுப்பினர்களில் ஒரு பகுதியினர் அரசாங்கத்திற்கு கோரிக்கை விடுத்துள்ளனர்.

இத்தகைய அதிகாரிகளின் நடத்தைகளையே எதிர்க்கட்சிகள் தமது தேர்தல் பிரசாரத்திற்கு வாய்ப்பாக பயன்படுத்த விளைவதால் அதனைத் தவிர்க்கும் முகமாக உயர் மட்ட விசாரணை ஒன்றின் மூலம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமெனக் கோரப்பட்டுள்ளது.

தென் மாகாணசபைத் தேர்தலின் போதும் இத்தகைய அதிகாரிகளின் நடவடிக்கைகள் பற்றியே எதிர்க்கட்சியினர் பிரசாரம் செய்ததாகவும், ஜனாதிபதி டி. பி விஜேதுங்கா, பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா ஆகியோருக்கு இப் பாராளுமன்ற உறுப்பினர்கள் குழு சுட்டிக்காட்டியுள்ளது.

## ரோஹான் தளுவத்தவிற்கு புதிய பதவி உருவாக்கம்

(கொழும்பு)

இராணுவத்தின் கட்டளையிடும் மற்றும் கட்டுப்படுத்தும் அமைப்பில் மாற்றங்களைச் செய்வதற்கு வசதியாக சிறிலங்கா இராணுவத் ... ரல் ரோஹான் தளுவத்த உட்பட ஆறு அதிகாரிகளுக்கு ஒரு வருட காலத்திற்கு எத்தகைய பதவி உயர்வும் வழங்கப்படக்கூடாது என்று இராணுவ விசாரணைக்குழு சிபா

ற்றுத்தனமானதாகவே இருக்கும்.

இதேசமயம் அமைச்சர் தொண்டமான் டி.பி. விஜேதுங்காவுடன் மிக நெருக்கமானவராகி விட்டார். ஜனாதிபதித் தேர்தலில் ஐ. தே. கட்சியை ஆதரிப்பது என தொண்டமான் முடிவு செய்து விட்டார் ஆயினும், இன்னமும் அதனை வெளிப்படையாக தெரிவிக்கவில்லை மலையக தமிழ்மக்களின் பிரச்சினைகளுக்கு முன்னுரிமை கொடுப்பவர்கள், தீர்த்து வைப்பவர்களுக்கே தேர்தலில் ஒத்துழைப்பு என்ற தொண்டமானின் அறிவிப்புக்கள் வெறும் ஏமாற்றுத்தனமானவையாகும்.

இதேவேளை முஸ்லிம் காங்கிரசின் ஒத்துழைப்பையும் தேர்தலின்போது பெறுவதே டி. பி. விஜேதுங்காவின் குறிக்கோளாகும். இது தொடர்பாக அஷ்ரப்புடன் ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கா பேச்சுக்கள் நடத்தியதாகவும் அறிய முடிகின்றது. அஷ்ரப்பைப் பொறுத்தும் தேர்தல் வெற்றி என்பதே குறியாகும். இவ்விடயத்தில் பெரும்பாலும் அமைச்சர் தொண்டமானை ஒத்த அரசியற் கொள்கையே அவரிடம் உண்டு.

இந்தவகையில், தற்பொழுது அமைச்சர் தொண்டமானும் - அஷ்ரப்பும் கூட்டுச் சேர்ந்துள்ளமை ஜனாதிபதி டி. பி. விஜேதுங்காவைப் பொறுத்து ஓரளவு வெற்றியே ஆகும். ஏனெனில், தன்னுடன் ஒத்துழைக்க தயாராக உள்ள தொண்டமானுடன் அஷ்ரப் கூட்டுச்சேருதல் என்பது அவரும் தொண்டமானின் வழியில் வருவதற்குத் தயாராகி விட்டதையே காட்டுகின்றது எனலாம்.

இந்நிலையில், இனப்பிரச்சினை குறித்து தொண்டமானும் - அஷ்ரப்பும் முன்வைத்த இனப்பிரச்சினைக்கான தீர்வுத் திட்டத்தை நிராகரித்து அவர்களுடன் மனக்கசப்பை வளர்த்துக் கொள்ள டி. பி. விஜேதுங்கா விரும்பவில்லை. இதன் காரணமாகவே அவர் மௌனமாக இருக்கின்றார். அத்தோடு, டி. பி விஜேதுங்காவிற்கு இனப்பிரச்சினை தொடர்பாகத் தொண்டமானும் - அஷ்ரப்பும் முன்வைத்துள்ள கோரிக்கையானது அவர்கள் தமது அரசியல் பலத்தை அதிகரித்துக் கொள்ளவும், பேரம் பேசும் சக்தியை அதிகரிக்கவும் மேற்கொண்டுள்ள முயற்சி என்பதும் தெரியும்.

இதற்குச் சான்றாக இனப்பிரச்சினை விவகாரத்தை அண்மையில் தொண்டமான் எடுத்தபோது தனது பேரம் பேசும் சக்தியைக் கூட்ட தொண்டமான் மேற்கொள்ளும் முயற்சி என அஷ்ரப்பே கூறியிருந்ததைச் சுட்டிக் காட்ட முடியும். இதன்படி, அமைச்சர் தொண்டமானும் - அஷ்ரப்பும் இனப்பிரச்சினை பற்றிப் பேசுவதும் தீர்வுத் திட்டம் சமர்ப்பிப்பதும் கூட்டாகத் தமது பேரம் பேசும் சக்தியை அதிகரிப்பதற்கே ஒழிய வேறு எதற்குமல்ல. இதேசமயம், டி. பி. விஜேதுங்கா மௌனமாக இருப்பது இவர்கள் இருவரையும் கைக்குள் வைத்துக் கொண்டு தனது அரசியற் பலத்தை அதிகரிப்பதற்கே ஆகும்.

# மட்டக்களப்பு விஜயம்

(மட்டக்களப்பு)

அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி திட்டத்தின் வெளிநாட்டுப் பிரதிநிதிகள் அண்மையில் வாழைச்சேனை பகுதிக்கு விஜயம் செய்துள்ளனர். மீளக் குடியேற்ற நடவடிக்கைகள் இடம் பெற்ற மீராவோடை, மாஞ்சோலை ஆகியகிராமங்களுக்கு சென்று அங்கு மீளக் குடியேறியுள்ள தமிழர்கள் எதிர்நோக்கும் துன்ப துயரங்கள் மற்றும் நெருக்கடிகள் தொடர்பாக ஆராய்ந்துள்ளனர்.

# விவசாயிகளுக்கு நட்டஈடு இதுவரை வழங்கவில்லை

(மட்டக்களப்பு)

அண்மையில் பெய்த பெரும் மழையினால் பதிக்கப்பட்ட வடக்கு, கிழக்கு பகுதி விவசாயிகளுக்கு குறிப்பாக அதிகம் பாதிப்படைந்த மட்டக்களப்பு பகுதி தமிழ் விவசாயிகளுக்கு இது வரை எந்த நட்ட ஈடும் வழங்கப்படவில்லை. எனினும் ஏனைய பகுதி விவசாயிகளுக்கு பாதிப்பிற்கான நட்ட ஈடு வழங்கப்பட்டு வருகின்றது குறிப்பிடத்தக்கது. இவ்வாறு நட்ட ஈடு வழங்கப்படாமையால் குறிப்பாக படுவான்கரை, பட்டிப்பளை பகுதி விவசாயிகள் பெரும் பாதிப்பு அடைந்துள்ளனர்.

# மனித முன்னேற்ற நடுநிலையம் திருத்தப்படுகிறது

(குருநகர்)

மண்டைதீவு - சிறிலங்கா ராணுவத்தின் எறிகணைக்கு சேதமடைந்திருந்த யாழ். மறைவட்ட மனித முன்னேற்ற நடுநிலையத்தின் மேல் மாடிக்கூரை திருத்த வேலைகள் அவசர அவசரமாக மேற்கொள்ளப்பட்டது.

நிலையத்தில் தேங்கியுள்ள அகதிகளுக்கான நிவாரணப் பொருட்களின் பாதுகாப்புக்காக இவ்வேலை தற்காலிகமாக மேற்கொள்ளப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

கொழும்பு சென்றுள்ள நிலைய இயக்குநர் வண. எல். எச். ஜெபநேசன் அடிகள் திரும்பியதும் மீதமான திருத்த வேலைகள் தொடரலாமெனத் தெரிவிக்கப்படுகிறது. (21)

கைதடி ஆயுர்வேத வைத்தியசாலை

# வெற்றிடங்களை நிரப்ப நடவடிக்கைஎடுக்கப்படுகிறது

(யாழ்ப்பாணம்)

கைதடி சித்த ஆயுர் வேத போதனா வைத்திய சாலையில் நிலவி வந்த பல்வேறு தரங்களிலும் உள்ள வெற்றிடங்கள் நிரப்பப்படவுள்ளன.

இவ்வைத்தியசாலையில் மிக நீண்டகாலமாக வைத்தியர், தாதிமார் மற்றும்எழுதுவினைஞர் போன்ற வெற்றிடங்கள் நிரப்பப்படாமல் இருந்து வந்துள்ளது.

எனவே இவ் வெற்றிடங்களையே தற்சமயம் நிரப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக தெரிவிக்கப்பட்டது.

இதற்கான பூரணப்படுத்தப்பட்ட விபரங்கள் மிகவிரைவில் அறிவிக்கப்படவுள்ளதாக தெரியவருகின்றது. (பா)

07.30 - செய்திகள்
07-35 - பத்திரிகைச் செய்திகள்
07.40 - நீங்கள் கேட்டவை நிகழ்ச்சியின் தொடர்ச்சி.

# சர்வானந்தாவுக்கு அழைப்பு

மேல் மாகாண ஆளுநர் பதவியிலிருந்து நீக்கப்பட்ட முன்னாள் உயர்நீதிமன்ற நீதிபதி எஸ்.சர்வானந்தாவை தமது கட்சியில் இணைந்து கொள்ளும்படி சுதந்திரக்கட்சி அழைப்பு விடுத்துள்ளது.

# தையல் பயிற்சி

(தென்மராட்சி)

இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் சாவகச்சேரி கிளையினரால் பெண்களுக்கான தையல் பயிற்சி வகுப்புகள் கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலயத்தில் நடத்தப்படவுள்ளது. (86)

# முதலிடம் பெற்றது

(குருநகர்)

யாழ். மாவட்ட மட்டத்தில் நடைபெற்ற தமிழ்மொழி கலைத்திறன் போட்டியில் பிரிவு மூன்றிற்கான குறட்பா அறிவுப்போட்டியில் யாழ். கல்வி வலயம் ஒன்றில் கொழும்புத்துறை சென்: ஜோசப்ஸ் வித்தியாலயம் முதலாம் இடத்தைப் பெற்றுள்ளது (21)

# வருடாந்த மகோற்சவம்

(தொல்புரம்)

தொல்புரம் வழக்கம்பரை அருள்மிகு முத்துமாரி அம்மன் ஆலயத்தின் வருடாந்த மகோற்சவம் கடந்த 13ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி சிறப்பாக நடைபெற்று வருகிறது நாளை புதன்கிழமை தேர்த்திருவிழாவும், மறுநாள் வியாழக்கிழமை தீர்த்த உற்சவமும் நடைபெறும். (41)

களைச் செய்வதற்கு வசதியாக சிறிலங்கா இராணுவத்தில் மேஜர் ஜெனரல் ரோஹான் தளுவத்தவிற்கு வழங்கப்படுவதற்காக புதிய பதவியொன்று உருவாக்கப்பட்டுள்ளது.

பிரதி இராணுவத் தலைமையக அதிகாரி என்ற பதவி உருவாக்கப்பட்டு கடந்த 13ம் திகதி முதல் மேஜர் ஜெனரல் ரோஹான் தளுவத்த அப்பதவியில் நியமிக்கப்பட்டுள்ளார். அனைத்து நிர்வாக நடவடிக்கைகளிலும் மற்றும் பராமரிப்பு பணிகளிலும் ரோஹான் தளுவத்த ஈடுபடுவதற்கு வசதியாகவே இப்பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது.

இதேவேளை இவர் முன்பு வகித்த முதலாவது பட்டாலியன் இராணுவத் தளபதி பதவிக்கு பிரிகேடியர் எச். எல். ஹப்பு ஆராச்சி நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

இதனிடையே மேஜர் ஜெனரல் ... கப்படக்கூடாது என்று இராணுவ விசாரணைக்குழு சிபார்சு செய்திருந்தது குறிப்பிடத்தக்கது.

# கல்விச் சுற்றுலா

(தொல்புரம்)

தொல்புரம் மத்திய சனசமூக நிலையத்தைச் சேர்ந்த விளையாட்டுக் கழக உறுப்பினர்கள், பாடசாலை மாணவர்கள், நிலைய உறுப்பினர்கள் கொண்ட குழுவினர் வடமராட்சி, தென்மராட்சி பகுதிகளின் பல முக்கியமான இடங்களுக்கு கல்விச் சுற்றுலா ஒன்றினை அண்மையில் மேற்கொண்டனர். (41)

# பணமா பாசமா மேடையேற்றம்

(யாழ்ப்பாணம்)

நவாலியில் வளர்ந்து வரும் இளம் நாடக கலைஞர்களின் 'பணமாபாசமா' எனும் சமூக நாடகம் இரண்டாவது தடவையாக நவாலி அட்டகிரி கோவிலில் மேடையேற்றப்பட்டது. சமூக விழுமியங்களை எடுத்துக் காட்டும் இந் நாடகம் பெருந்திரளான மக்களின் பாராட்டைப் பெற்றுள்ளது. (05)

# ஆண்டுப் பொதுக்கூட்டம்

தமிழீழ கல்வி மேம்பாட்டு பேரவையின் ஆண்டுப்பொதுக் கூட்டம் நாளை காலை பத்து மணியளவில் பேரவை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

# குப்பையில் கிடந்த பொருள் குத்திய போது வெடித்தது

## சிறுவன் காயம்

(குருநகர்)

தம்பியார் குப்பையில் இருந்து எடுத்து வந்த பொருளை தமையனார் கல்லினால் குத்தியபோது அப்பொருள் வெடித்ததில் குத்திய சிறுவன் படுகாயமடைந்தான்.

இச்சம்பவம் நேற்று முன் தினம் மாலை 6-30 மணியளவில் குருநகர் அன்னை வேளாங்கண்ணி மாதா ஆலயப் பகுதியில் நடைபெற்றது.

ஏனைய சிறுவர்கள் பயம் காரணமாக தூரத்திற்கு சென்று விட்டதால் அந்த அபாயத்திலிருந்து தப்பிக் கொண்டனர்.

காயமடைந்தவரான ஞானப்பிரகாசம் ஞானவேந்தன் (வயது 10) யாழ் போதனா வைத்திய சாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப் பட்டுள்ளார். (21)

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நல்லூர் கிளைநூலகம்.



# கப்பல் மூலம் ஏற்றிவரப்படும் போது மண்ணெண்ணெய் பெருமளவில் விரயம்

(யாழ்ப்பாணம்)

கொழும்பிலிருந்து கப்பல் மூலம் ஏற்றிவரப்படும் மண்ணெய் பெருமளவில் விரயமாகி விடுவதாக தெரியவந்துள்ளது.

கொழும்பிலிருந்து 4000 பரல் எண்ணெயை கப்பலில் ஏற்றிவந்தால் அவற்றில் 200 பரல்கள் வரையில் கசிந்து வெளியேறி விடுவதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இவை கொழும்பில் நிரப்பப்படும் போது அளவு குறைத்து நிரப்பப்படுவதுடன் கப்பலில் ஏற்றி இறக்கும் போதும் பரல்களில் வெடிப்பு ஏற்பட்டு அதனூடாக மண்ணெய் வெளியேறி விடுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. அத்துடன் கொழும்பில் கொள்வனவு செய்யும் பால்கள் தரமற்றவையாக இருப்பதும் இதற்கு முக்கிய காரணம் எனவும் தெரியவந்துள்ளது.

தற்போது பெருமளவு மண்ணெய் வடபகுதிக்குள் எடுத்துவர அரசு அனுமதித்துள்ளதைத் தொடர்ந்து அவற்றை கொள்வனவு செய்வதற்கு தேவையான வெற்று பீப்பாக்களை பெறுவதில் பெரும் சிரமத்தை எதிர்நோக்க வேண்டியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இங்கு எடுத்து வரப்படும் பரல்கள் மீள கொண்டு செல்லப்படுவதில்லை. இதனால் கொழும்பில் பரல்களுக்கு பெரும் தட்டுப்பாடு நிலவுவதாகவும் ஆரம்பத்தில் 250 ரூபாவிற்கு விற்ற பரல்கள் தற்போது 750 ரூபா வரை உயர்ந்துள்ளதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

## றுகுணுவில் வவுச்சர்கள்

(வடமராட்சி)

யாழ். மாவட்ட ஓய்வூதியர்களது யூன் மாத ஓய்வூதிய வவுச்சர்கள் நேற்று பருத்தித்துறைக்கு வந்த 'றுகுணு' கப்பலில் எடுத்துவரப்பட்டன. அதனுடன் தேசிய அடையாள அட்டைகளும் வந்தன.

மேலும் 900 மெட்றிக் தொன் சீனி, 10 மெட்றிக் தொன் தேயிலை, பால்மா வகைகள் என்பனவும் எடுத்து வரப்பட்டன. பருத்தித்துறைக்கு கப்பல் காலை வந்ததும் பொருள்கள் இறக்கும் வேலைகள் உடனேயே ஆரம்பமானது. இதனையடுத்து அத்தியாவசியப் பொருள்களுடன் 'கோமாரி' கப்பல் வரவுள்ளது. (யோ)

# பிரேமா சிலை திறப்பில் ஹேமா - டி. பி. சந்திப்பு

(கொழும்பு)

சிறிலங்கா ஜனாதிபதி டி. பி. விஜேதுங்காவின் தலைமையில் நேற்று முன் தினம் நடைபெற்ற முன்னாள் ஜனாதிபதி ஆர். பிரேமதாசாவின் சிலை திறப்பு வைபவத்தில் திருமதி ஹேமா பிரேமதாசா விசேட விருந்தினராக கலந்து கொண்டுள்ளார்.

மாவனெல்லையில் நடைபெற்ற மேற்படி வைபவத்தில் இவ் இருவரும் கலந்து கொண்டதாகவும் இதில் ஜனாதிபதி டி. பி விஜேதுங்காவும், ஹேமா பிரேமதாசாவும் மிகவும் அந்நியோன்னியமாக அளவளாவினர் என்றும் தெரியவருகின்றது.

இதேவேளை இவ் வைபவம் அரசியலில் பெரிய மாற்றம் ஒன்றை கொண்டு வரலாம் என அரசியல் அவதானிகள் கருதுகின்றனர்.

## 'சமூக ஒளி' வெளியீடு

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக சமூக விஞ்ஞான மன்றத்தினரின் நான்காவது இதழ் 'சமூக ஒளி' நூல் வெளியீட்டு விழா இன்று மாலை 3. 30 மணிக்கு யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெறும். (05)

# கருணாநிதி உட்பட தலைவர்கள் பலரும் தமிழகத்தில் கைது

(சென்னை)

தி.மு.க. தலைவர் மு. கருணாநிதி உட்பட எதிர்க்கட்சித் தலைவர்கள் பலரும் நேற்றுக் காலை பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

69 சதவீத இட ஒதுக்கீடு தொடர்ந்தும் நீடிக்க வேண்டும் என்று வலியுறுத்தி தி.மு.கவும் அதன் தோழமைக் கட்சிகளும் நேற்று தமிழக அரசு அலுவலகங்கள் முன் பாக மறியல் போராட்டம் நடத்தஇருந்தது தெரிந்ததே.

இதனையடுத்து தி.மு.க. தலைவர் மு. கருணாநிதி, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் ஆர். நல்லகண்ணு, பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர் டாக்டர் எஸ். ராம்தாஸ். ஜனதா கட்சி தலைவர் வடிவேலு, எம். ஜீ. ஆர் அண்ணா தி.மு.க. தலைவர் எஸ். திருநாவுக்கரசு ஆகியோர் கைது செய்யப்பட்டவர்களில் சிலராகும்.

இவர்களைத் தவிர பல்வேறு கட்சிகளையும் சேர்ந்த முக்கிய பிரமுகர்கள் உட்பட சுமார் 16,000 பேர் இதுவரை கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களில் தலைவர்கள் அனைவரும் நேற்று மாலை விடுவிக்கப்பட்டனர். ஏனைய 16,000 பேரும் நேற்றிரவு விடுவிக்கப்பட விருந்தனர்-

## கூட்டுக்கு முயற்சி

தி.மு.க. தலைவர் மு.கருணாநிதிக்கு பிறந்தநாள் தெரிவித்திருப்பதன் மூலம்வாழப்பாடி இராமமூர்த்தி காங்கிரஸ் தி.மு.க கூட்டுக்கு முயற்சித்து வருகின்றமை தெளிவாகியுள்ளது என்று தமிழக அமைச்சர் டி.என்.செல்வகணபதி கூறியுள்ளார்.

# தமிழகத்தில் பொலிஸ் மீது கல்வீச்சு தாக்குதல்

(சென்னை)

தமிழ்நாட்டில் அரசியல் கட்சித் தலைவர்கள் பலரும் கைது செய்யப்பட்டிருப்பதைத்தொடர்ந்து சில இடங்களில் பொலிசார் மீது கல்வீச்சு நடத்தப்பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது. தி மு. கழகத்தைச் சேர்ந்த பொதுச் செயலாளர் பேராசிரியர் க, அன்பழகன், துணைப் பொதுச் செயலாளர் இளைஞர்அணிச் செயலாளர் மு க. ஸ்டாலின் உட்பட பலரும் கைது செய்யப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

சென்னையில் மட்டுமன்றி மாநிலத்தின் பல்வேறு இடங்களிலும் இக் கைதுகள் இடம்பெற்றதாக காவல்துறையினர் கூறியுள்ளனர்.

# சந்திரிகா - அஷ்ரப் சந்திப்பு இனப்பிரச்சினை ஆராய்வு

சுதந்திரக் கட்சியின் பிரதித் தலைவி சந்திரிகா குமாரணதுங்காவை முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் அஷ்ரப் கடந்த வியாழனன்று சந்தித்துப் பேசினார். இச் சந்திப்பின் போது எதிர்வரும் தேர்தல்கள், இனப்பிரச்சினை போன்ற விடயங்கள் ஆராயப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண வேண்டிய தன் அவசியத்தை இச் சந்திப்பில் அஷ்ரப் வலியுறுத்தினார் எனவும் பேச்சுக்கள் இரு மணிநேரம் நீடித்தது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

## பாஸ்கரலிங்கம் நாடு திரும்புவார்

மருத்துவ சிகிச்சைக்காக வெளிநாட்டு பயணத்தை மேற்கொண்டுள்ள ஆர். பாஸ்கரலிங்கம் இம்மாத இறுதியில் மீண்டும் இலங்கை திரும்ப இருப்பதாக தெரிவித்துள்ளார்.

இவ்வாறு இலங்கைக்கு திரும்பியதும் ஜூலை முதலாம் திகதி தொடக்கம் அவர் நிதியமைச்சின் செயலாளராகவும் திட்ட அமுலாக்கல் அமைச்சின் செயலாளராகவும் மீண்டும் கடமை ஏற்பார் என நம்பப்படுகின்றது.

# தயாரிப்பு வேலைகளில் தேர்தல் திணைக்களம்

(கொழும்பு)

இவ்வருட இறுதியில் நடைபெறவுள்ள ஜனாதிபதித்தேர்தலுக்கு சுமார் பதினையாயிரம் தேர்தல் உத்தியோகத்தர்களை நியமனம் செய்வதற்கான நடவடிக்கைகளை தேர்தல் திணைக்களம் மேற்கொண்டு வருகின்றது.

இவ் உத்தியோகத்தர் தெரிவு மிக விரைவில் நடைபெறவுள்ளதாகவும் வழமை போன்று அரசாங்க திணைக்கள உத்தியோகத்தர்கள் இதற்காக தெரிவு செய்யப்பட இருப்பதாகவும் தெரியவருகிறது.

இதேவேளை தேர்தல் வாக்குப் பெட்டிகள் தயாரிப்பு வேலைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் இன்னும் ஓரிரு மாதங்களில் இப்பெட்டிகள் அமைக்கும் வேலை நிறைவு பெறும் எனவும் தேர்தல் திணைக்கள தகவல் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

சென்ற ஜனாதிபதி தேர்தலைவிட இம்முறை தேர்தல் உத்தியோகத்தர் பத்து விகிதத்தினால் அதிகரிக்கப் படவிருப்பதாகவும் அவ் அதிகாரி மேலும் சுட்டிக்காட்டியுள்ளார்.

**ஜூலை -5**

பூர்வமாக அனுஷ்டிக்கும் முகமாக பல முன்னேற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன, வீதிகள்தோறும் கரும்புலிகள் நாள் அனுஷ்டானங்களுக்கான அறைகூவல் விடுக்கும வகையிலும், கரும்புலிகளின் சாதனைகளை! அறிவிக்கும் வகையிலும் அமைந்த பதாகைகள் கட்டப்பட்டுள்ளன.

இவற்றைவிட கோட்டமட்டத்திலும் மாவட்ட மட்டத்திலும் கலைநிகழ்ச்சிகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன இவ் வாறான முன்னேற்பாடுகளில் மக்கள் ஆர்வத்துடன் பங்கு பற்றி வருவதனை அவதானிக்க முடிகின்றது. (க)

## மணவாளக்கோல திருவிழா

(தொல்புரம்)

தொல்புரம் பத்தானையம் பதி ஆருள்மிகு ஸ்ரீ அஞ்ஞான வயிரவசுவாமிகோவிலில் மணவாளக் கோலத் திருவிழா இன்று காலை 8.00 மணி முதல நடைபெறவுள்ளது. விசேட அபிஷேக ஆராதனைகள், பூசை வழிபாட்டினைத் தொடர்ந்து சிறப்பு சமயச் சொற் பொழிவும், திருமுறைப் பண்ணிசை ஓதலும் பக்திபூர்வமாக இடம்பெறும்.


## மாலை நிகழ்ச்சி பிற்போடப்பட்டுள்ளது

22 - 06 - 94 புதன்கிழமை நடைபெற இருந்த இன்னிசை மாலை தவிர்க்க முடியாத காரணத்தால் பிற்போடப்பட்டுள்ளது. நடைபெறும் திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

வர்த்தக மாணவர் மன்றம்,
யாழ். மத்திய கல்லூரி.

[8618]



## யாழ். இந்துக் கல்லூரி

பழைய மாணவர் சங்கம் நடாத்தும்

## முழுநிலாநாட் கருத்தரங்கு

காலம்: 22-06-1994 பிற்பகல் 3-00 மணி

இடம்: குமாரசாமி மண்டபம்



## முக்கிய அறிவித்தல்

தனியார் கல்வி நிறுவன
ஒன்றியம் - யாழ். மாவட்டம்

சகல கோட்ட நிர்வாகசபை உறுப்பினர்க்கு

சகல கோட்டங்களினதும் நிர்வாகசபை உறுப்பினர்கள் அனைவரும் மிக முக்கியமான கலந்துரையாடலுக்காக இன்று (21-ம் திகதி) காலை 10 மணிக்கு நல்லூரிலுள்ள தமிழீழ கல்வி மேம்பாட்டுக் கழக அலுவலகத்தில் தவறாது ஒன்றுகூடுமாறு கேட்டுக்கொள்


## மதகுருமாருக்கு மருத்துவ காப்புறுதி

(கொழும்பு)

மதகுருமாருக்கான மருத்துவ காப்புறுதி திட்டம் ஒன்றை மிக விரைவில் ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கா ஆரம்பிக்க இருப்பதாக ஜனாதிபதியின் செயலகத்தை மேற்கோள் காட்டி 'லங்காதீப' பத்திரிகை செய்தி வெளி

**அமெரிக்க**

அமெரிக்க தூதரகமும் கூறியிருந்தது இது குறித்து கருத்து தெரிவித்த சிறிலங்கா வெளியுறவு அமைச்சு அதிகாரி ஒருவர், மேற்படி விண்ணப்பம் பரிசீலிக்கப்பட்டதாகவும் நிலைமையை அவதானிக்க இராஜதந்திரிகள் நேரில் செல்வதை அனுமதிக்க முடியாதுஎன அமெரிக்கத் தூதரகத்திடம்கூறியுள்ளோம் எனவும் குறிப்பிட்டார்

**ஐக்கிய**

வெற்றியளிக்கக் கூடிய ஒன்று என அவ் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு இருகட்சிகளும் ஒன்றிணைந்து வழங்கும் தீர்வொன்றின் மூலமே நிலையான தீர்வொன்றைக் கொண்டுவர முடியும். அத்துடன் தமிழர்களின் சந்தேகங்களையும் தீர்த்துவைக்க முடியும். தமிழர்களைத் திருப்திப்படுத்தக்கூடிய தீர்வொன்றையே தமிழர்கள் ஏற்றுக்கொள்வர். இருகட்சிகளும் ஒன்றிணைந்து தீர்வுத் திட்டத்தை வகுப்பதன் மூலமே இந் நிலையை எட்ட முடியும் என ஜனாதி

காலம்: 22-06-1994 பிற்பகல் 3-00 மணி
இடம்: குமாரசாமி மண்டபம்

கருத்துரை வழங்குபவர் I

திரு. சி. சிவலிங்கராசா. தமிழ்த்துறை, சிரேஷ்ட விரிவுரையாளர், யாழ். பல்கலைக் கழகம்

கருத்துரை

'19 ஆம் நூற்றாண்டு ஈழத்துத்தமிழ் இலக்கியம்'

கருத்துரை வழங்குபவர் II

திரு. ஆர். நந்தகுமார் சிரேஷ்ட விரிவுரையாளர், பொறியியற்துறை, யாழ். பல்கலைக்கழகம்

கருத்துரை

"வெளிநாட்டு உதவியும் அரசியல் பொருளாதாரப் பரிமாணமும்".

ஆர்வலர்களை அன்புடன் அழைக்கின்றோம்.

செயலாளர்
யா. இ. க. ப. மா. சங்கம்

விளம்பர அன்பளிப்பு:

**கணேசன் களஞ்சியம்,**
திருநெல்வேலி மார்க்கட் (உட்புறம்)
(சி-9847) திருநெல்வேலி. மார்க்கட்

கள் அனைவரும் மிக முக்கியமான கலந்துரையாடலுக்காக இன்று (21-ம் திகதி) காலை 10 மணிக்கு நல்லூரிலுள்ள தமிழீழ கல்வி மேம்பாட்டுக் கழக அலுவலகத்தில் தவறாது ஒன்றுகூடுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

பொதுச் செயலாளர்
(சி-9851) யாழ் மாவட்டம்

## முக்கிய அறிவித்தல்

உடுவில் உதவி அரசாங்க அதிபர் பிரிவிற்குட்பட்ட வர்த்தகர்களுக்கான முக்கிய அறிவித்தல். எமது சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் 22-06-94 மதியம் 12.00 மணிக்கு இடம்பெறவுள்ளது. இடம் சுன்னாகம் சந்தை மைதானம். ஆகவே எமது எல்லைக்குட்பட்ட சகல வர்த்தகர்களும் தவறாது 12.00 மணிக்கு தங்களது ஸ்தாபனங்களைப் பூட்டி கூட்டத்திற்கு சமுகமளிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

குறிப்பு:- சென்ற 30-05-94 ஆம் திகதி அறிவித்தலின்படி பொதுக்கூட்டம் கூடும் இடமும் நேரமும் இவ் அறிவித்தலில் மாற்றப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

(சி-9850) சுன்னாகம் வர்த்தக சங்கம்

**எகஸ்போ பேணிச்சர்ஸ்**
பெயர் மாற்றப்பட்டுள்ளது.
இன்று முதல்
**யாழ் நுகர்வோர் காட்சியகம்**
இல. 441, காங்கேசன்துறை சாலை, வண்ணை சிவன்கோவில் சந்தி,
யாழ்ப்பாணம்.
வீட்டுப் பாவனைப் பொருட்கள், கண்ணாடிகள் / படங்கள், ஆர்ப்பிக்கோ, சியெஸ்ரா மெத்தைகளின் விற்பனையாளர்கள்.
(சி-9849)

ஆரம்பிக்க இருப்பதாக ஜனாதிபதியின் செயலகத்தை மேற்கோள் காட்டி 'லங்காதீப' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

ஜனாதிபதியினால் அண்மையில் அறிவிக்கப்பட்ட மக்கள் நலத் திட்டத்தின் மேலும் ஒரு அங்கமாக இது அமைய இருப்பதாகவும் இதனை ஜனாதிபதி பூரணை தினத்தில் வெளியிடுவார் என ஜனாதிபதி செயலக வட்டாரங்கள் தெரிவிப்பதாக அச்செய்தி குறிப்பிடுகிறது.

## பதிவு செய்யவும்

தாச்சி விளையாட்டை ஒருங்கமைக்கும் நோக்குடன் யாழ். மாவட்ட தாச்சி விளையாட்டுச் சங்கம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. எனவே யாழ். மாவட்டத்திலுள்ள சகல தாச்சி விளையாட்டுக் கழகங்களையும் யாழ். மாவட்ட தாச்சி விளையாட்டுச் சங்கத்தில் பதிவு செய்துகொள்ளுமாறு யாழ். மாவட்ட விளையாட்டு அபிவிருத்திக் குழு கேட்டுக்கொள்கின்றது. வருங்காலத்தில் பதிவு செய்த கழகங்கள் மட்டுமே தாச்சிப் போட்டிகள் நடாத்தவோ, போட்டிகளில் பங்குபற்றவோ அனுமதிக்கப்படும். பதிவு செய்வதற்கான படிவங்களை கோண்டாவில் மாவட்டச் செயலகத்தில் (அரசியல் துறை) பெற்றுக்கொள்ளலாம்.

யாழ். ஸ்ரீதரில்
Aronold Schwarzenegger
நடித்த
PREDATOR
தினசரி
மாலை 4, 6மணி
சனி ஞாயிறு
காலை 10.30 மணி
மாலை 4, 6மணி
(சி-9822)

நேரில் செல்வதை அனுமதிக்க முடியாதுஎன அமெரிக்கத் தூதரகத்திடம்கூறியுள்ளோம் எனவும் குறிப்பிட்டார்

## அராலியில்

களது உருவப்படங்கள் வன்னி, மட்டு / அம்பாறைத் தொடர்பகங்களிலிருந்து இன்று பி.ப. 4.00 மணிக்கு அணிவகுப்பு மரியாதைகளுடன் எடுத்துவரப்பட்டு கந்தர் மடம் ஆத்திசூடி கலைமகள் ச.ச. நிலையத்தில் மக்கள் அஞ்சலிக்கு வைக்கப்பட்டு அஞ்சலிக்கூட்டம் நிறைவுற கோப்பாய் மாவீரர் துயிலுமில்லம் எடுத்துச் செல்லப்பட்டு கப்டன் பாண்டியனின் நினைவுக்கல் இறுதி இராணுவ மரியாதைகளுடன் நாட்டப்படும்.

இருகட்சிகளும் ஒன்றிணைந்து தீர்வுத் திட்டத்தை வகுப்பதன் மூலமே இந் நிலையை எட்ட முடியும் என ஜனாதிபதி டி.பி. விஜேதுங்க நம்புகிறார்.

ஜனாதிபதி டி.பி. விஜேதுங்காவும், சிறிமாவோ பண்டாரநாயக்காவும் மலையகத் தொடர்பு உடையவர்களாக இருப்பதால் இரு கட்சிகளும் ஒன்றிணைந்து இனப் பிரச்சினைக்கு தீர்வை ஏற்படுத்த விரும்புகின்றன என நம்பப்படுகிறது.

எனினும் பெரும்பாலும் இவ் இரு கட்சிகளையும் சேர்ந்த பழமைவாதிகள் இதனை எதிர்ப்பர். எனினும் தீர்வுத் திட்டம் முன்வைக்கப்படும் சாத்தியக் கூறுகளே அதிகமாக இருப்பதாக அவ் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மரண அறிவித்தல்

### திரு. இளையதம்பி பாலசுப்பிரமணியம்

(இளைப்பாறிய மின்முகாமி, இலங்கை மின்சாரசபை)

கட்டுடையைப் பிறப்பிடமாகக் கொண்ட திரு. இளையதம்பி பாலசுப்பிரமணியம் 19-6-1994இல்காலமானார். இவர் இராசம்மாவின் அன்புக் கணவரும், திரு.பாலச்சந்திரன் இளைப்பாறிய இலிகிதர் (Hulfs-drop Courts) (கொழும்பு), திருமதி சகுந்தலா சிவசுப்பிரமணியம், திரு முருகவேள் (இலங்கை மின்சாரசபை சுன்னாகம்) ஆகியோரின் பாசமுள்ள தந்தையும், திருமதி ருக்மணி, திரு செ. சிவசுப்பிரமணியம் (கால்நடைப்பண்ணை முகாமையாளர் ஹோமாகம) திருமதி பத்மினி ஆகியோரின் அன்பு மாமனாரும், தினேஷ். சிவரூபன். ஜெயகணேஷ் சிவகௌரி, பிரசாந்தன், துஷ்யந்தன் ஆகியோரின் அன்புப் பாட்டனாருமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 22-6-1994 புதன்கிழமை பிற்பகல் 2மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் பிப்பிலி மயானத்தில் தகனம் செய்யப்படும்.

தகவல்:
மகன்.
15 பழைய வீதி,
கட்டுடை.
(8612)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31 ஆம் இலக்கத்திலுள்ள ஈழநாதம் பணிமனையில் 1994 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 21ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.